TAMIL NADU LEGISLATURE
6 NOV 1972
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1972 ஆகஸ்ட் 10.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி

*26. வினா.—திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியப் பெருமக்களுக்கு வீட்டுவசதிப் படி அரசு வழங்கி வருகிறதா?

(இ) ஆம் எனில், கிராமங்களில் அமைந்த கல்லூரிகளுக்கு அண்மையிலுள்ள நகரங்களிலிருந்து செல்லும் ஆசிரியர்களுக்கு எந்த அடிப்படையில் வீட்டுவசதிப் படி வழங்கப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) கல்லூரிகளோ அல்லது கல்வி அலுவலகங்களோ, மாநகர், நகர் மற்றும் குறிப்பிடப்பட்ட இடங்களில் இருந்தால்தான் அந்தந்த இடங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட வீட்டு வாடகைப்படி கொடுக்கப்படும். பணியாளர்கள் மட்டும் மேற்கண்ட இடங்களில் வசித்து கல்லூரிகள் அல்லது அலுவலகங்கள் கிராமங்களில் இருந்தால், அவர்களுக்கு மேற்கண்ட இடங்களுக்கு உண்டான வீட்டு வாடகைப்படி கிடைப்பது இல்லை.

திரு. கோ. இளங்கோவன்: துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் உள்ள பூண்டி புஷ்பம் கல்லூரி போன்ற கல்வி நிலையங்களுக்கு தஞ்சை போன்ற பகுதிகளிலிருந்துதான் பேராசிரியர்கள் செல்கிறார்கள். அவர்களுக்கு வேறு வழிவகை கிடையாது. தஞ்சை நகரிலேயே அமைந்துள்ள கல்லூரிக்குச் செல்கிறவர்களைக் காட்டிலும் அவர்களுக்கு வசதிகள் வெகுக் குறைவாக இருக்கின்றன. அப்படியிருக்கின்றபோது அவர்களுக்கும் நகரத்தில் அமைந்துள்ள கல்லூரிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்குத் தரப்படுகின்ற வீட்டு வாடகைப் படி தர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, ஏதேனும் ஒரு முறையைத்தான் கடைப்பிடிக்க முடியும். 'கல்லூரிகள் அல்லது கல்வி அலுவலகங்கள் இருக்கும் மாநகர், நகர்' என்று இருக்கிறது. சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை 32 கிலோ மீட்டர் சுற்றுப்புற இடங்கள், மதுரை மாநகரத்தைப் பொறுத்தவரை 16 கிலோ மீட்டர் சுற்றுப்புற இடங்கள் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் இருப்பவர்களுக்கு மட்டும் தான் வீட்டு வாடகைப்படி அளிக்கப்படுகிறது. கல்லூரிகள், கல்வி அலுவலகங்கள் இருக்கிற நகரங்கள் என்ற அடிப்படையில்தான் தர முடியுமே தவிர, கல்லூரிகள் மற்றவைகளெல்லாம் கிராமங்களில் இருந்து, அவற்றில் பணிபுரிகிறவர்கள் யார் யார் நகர்ப்புறங்களில் இருக்கிறார்கள் என்று தேடி, அந்தந்த நகரங்களில் உள்ளவர்களுக்குத் தருவது என்பது நடைமுறையில் சாத்தியப்படாது.

Pension for retired teachers

***27 *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—**

(*a*) whether this Government has any proposal to increase the pension for the retired teachers of the aided elementary schools in Tamil Nadu; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) இல்லை. ஆயினும், அண்மையில் தாராள ஓய்வூதிய விதிகளும், குடும்ப ஓய்வூதிய விதிகளும் கீழ்க்கண்டவாறு அரசுப் பள்ளி அல்லாத பள்ளி ஆசிரியர்களுக்கும் (Non-Government School teachers) விரிவாக்கப்பட்டுள்ளன.

(1) 2-10-1970 அன்றோ, அதற்குப் பின்னரோ வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள்.

(2) 1-6-1970 அன்றோ அதற்குப் பின்னரோ (ஆனால் 2-10-1970க்கு முன்னதாக) ஓய்வு பெற்று, பள்ளி ஆண்டு 1970-71 முடிய வேலையில் நீடிக்கப்பட்டுள்ளவர்கள்.

மேற்கூறியவாறு விரிவாக்கப்பட்டுள்ளதால் எல்லா அரசுப் பள்ளி அல்லாத பள்ளி ஆசிரியர்களும், உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளின் ஆசிரியர் உட்பட, அதிக அளவில் ஓய்வூதியம் பெறத் தகுதி உடையவர்களாகின்றனர்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: துணைத் தலைவர் அவர்களே, 1960-ஆம் ஆண்டுக்கு முன்பு 'சரண்டர்' செய்யப்பட்ட தனியார்க் கல்லூரிகளில் இருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிறார்கள்.